# மதுரை மாநகராட்சி
# மாண்புமிகு மேயர் தலைமையில் நடைபெற்ற
# 25வது மாமன்ற கூட்டத்தின் தீர்மானங்கள்
# 28.12.2023-ந் தேதி நேரம்: காலை: 10.30 மணி

## 1. அ1/013703/2023

அரசாணை (D)எண்.622, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந7) துறை நாள். 04.11.2023 -ன் படி திருநெல்வேலி மாநகராட்சியில் நிர்வாக அலுவலராக பணிபுரிந்த திருமதி.ரா.அருணாசலம், உதவி ஆணையாளர் (நிர்வாகம்) ஆக பதவி உயர்வு மற்றும் பணியிடமாறுதலின் கீழ் மதுரை மாநகராட்சிக்கு நியமனம் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. தனியர் இம்மாநகராட்சியில் உதவி ஆணையாளர்(நிர்வாகம்) ஆக 10.11.2023 முதல் பணியேற்பு செய்து பணிபுரிந்து வருகிறார் என்ற விபரத்தை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 363**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 2. ஆ3/005692/2022

மதுரை மாநகராட்சியில் பணிபுரியும் இணைக்கப்பட்ட எல்லை விரிவாக்க தொகுப்பூதியப் பணியாளர்கள் OHT ஆப்பரேட்டர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் மற்றும் இதர தொகுப்பூதிய பணியாளர்களுக்கு அரசாணை எண்.2(D) No.62, Date:11.10.2017-ல் 01.10.2022 முதல் பஞ்சப்படி தொகை ரூ.5401/- வழங்கப்பட்டு வருகிறது.

தற்பொழுது தொழிலாளர் நலத்துறை ஆணையரக உத்தரவு எண். Z3/4023/2023, நாள்:27.02.2023-ன்படி 2022-2023-ம் ஆண்டுக்கான அகவிலைப்படி உயர்வினை ரூ.5401/- லிருந்து ரூ.5848/- ஆக உயர்த்தி அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து மதுரை மாநகராட்சியில் தற்பொழுது பணிபுரியும் இணைக்கப்பட்ட எல்லை விரிவாக்க தொகுப்பூதியப் பணியாளர்கள் OHT ஆப்பரேட்டர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் மற்றும் இதர தொகுப்பூதிய பணியாளர்கள் 263 நபர்களுக்கு 01.10.2023 முதல் அகவிலைப்படியினை நிர்ணயம் செய்து வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட அரசாணை எண்.2(D) No.62, Date:11.10.2017 மற்றும் தொழிலாளர் நலத்துறை ஆணையர் கடிதம் ந.க.எண்.Z3/4023/2023 நாள்:27.02.2023-ன்படி பஞ்சப்படி உயர்த்தி வழங்குவதால் உத்தேச செலவினம் கூடுதலாக மாதம் ஒரு பணியாளருக்கு ரூ.447/- என கணக்கிட்டு மொத்தம் 263 தொகுப்பூதியப் (தூய்மைப்பணியாளர்கள்–175, OHTஆப்ரேட்டர்கள்–76, வருவாய் உதவியாளர்கள்–6, பதிவு எழுத்தர்கள்–2, கணினிப்பதிவாளர்–1, வாகன ஓட்டுநர்–

1, கிளீனர்–1, மேஸ்திரி–1) பணியாளர்களுக்கு வழங்குவதால் (263 X ரூ.447) ரூ.1,17,561/- கூடுதலாக உத்தேச செலவினம் ஆகும்.

மேற்கண்ட தொகுப்பூதிய பணியாளர்களுக்கு 01.10.2023 முதல் பஞ்சப்படியை உயர்த்தி பொது நிதியிலிருந்து வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 364**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**3.Ma.Po4/Est.No.502/20-21**

மதுரை மாநகராட்சி மண்டலம்–4 பழைய வார்டு எண்.97 (புதிய வார்டு எண் 95, மண்டலம்–5)ல் உள்ள பாண்டியன் நகர் பூங்காவை சுற்றி சுற்றுச்சுவர் கட்டுதல் மற்றும் புதியதாக கழிப்பறை அமைக்கும் பணிக்கு ரூ.15.00/- லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள ஆணையாளர் அவர்களால் 29.01.2021 அன்று நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்காக டெண்டர் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு டெண்டர்கள் 23.02.2021 அன்று வரப்பெற்றன.

1. திருமதி.P.அன்னலெட்சுமி மதுரை : மதிப்பீடு விலையை விட 0.71% குறைவு
2. M/S.கிளாசிக் இஞ்ஜினியரிங் மதுரை : மதிப்பீடு விலையை விட 2.01% அதிகம்

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு டெண்டர்களில் திருமதி.P.அன்னலெட்சுமி மதுரை என்ற ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு விலைவிகிதத்திலிருந்து 0.71% குறைவாக ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ளார். இவ்விலைவிகிதத்தை ஏற்று ஆணையாளர் அவர்களிடம் 25.02.2021 அன்று ஒப்புதல் பெற்று வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட விவரப்படி ஆணையாளர் அவர்களிடம் பெறப்பட்ட நிர்வாக ஒப்புதல் மற்றும் வேலை துவங்கும் உத்தரவுக்கும் மேற்கண்ட மதிப்பீட்டு பணியை செய்து முடித்து உள்ளதற்கு உரிய பட்டியல் தொகை ரூ.14.70/- லட்சம் வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 365**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**4.Ma.Po.1/Est.No.1055/19-20**

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட திருப்பரங்குன்றம் ஹார்விபட்டி பகுதிகளுக்கு வைகை ஆற்றிலுள்ள கிணறுகளிலிருந்து சப்ளை செய்யப்பட்ட தண்ணீர் வரத்து குறைந்துவிட்டதால் கோடை காலத்தில் மேற்கண்ட பகுதிகளுக்கு தங்குதடையின்றி குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு காவிரி கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் திருநகர் மொட்டமலையில் அமைக்கப்பட்டுள்ள தரைமட்ட தொட்டியிலிருந்து ஒரு இணைப்பு குழாய் மூலம் குடிநீர் எடுத்து விநியோகம் செய்யும் பணிக்காக ரூ.6.12/- லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ள ஆணையாளர் அவர்களால் 21.07.2020 அன்று நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்காக டெண்டர் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு டெண்டர்கள் 17.09.2020 அன்று வரப்பெற்றன.

1. திருமதி.P.அன்னலெட்சுமி மதுரை : மதிப்பீடு விலையை விட 0.03% குறைவு
2. M/S.கிளாசிக் இஞ்ஜினியரிங் மதுரை : மதிப்பீடு விலையை விட 1.43% அதிகம்

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு டெண்டர்களில் திருமதி.P.அன்னலெட்சுமி மதுரை என்ற ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு விலைவிகிதத்திலிருந்து 0.03% குறைவாக ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ளார். இவ்விலைவிகிதத்தை ஏற்று ஆணையாளர் அவர்களிடம் 20.10.2020 அன்று ஒப்புதல் பெற்று வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட விவரப்படி ஆணையாளர் அவர்களிடம் பெறப்பட்ட நிர்வாக ஒப்புதல் மற்றும் வேலை துவங்கும் உத்தரவுக்கும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 366**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**5.Ma.po2/Est.No.578/18-19**

மதுரை மாநகராட்சி மண்டலம்.2ல் வார்டு எண்.27 மற்றும் 28(புதிய வார்டு எண்கள் 9 மற்றும் 10, மண்டலம்–1)க்குட்பட்ட மாநகராட்சிக்கு சொந்தமான பூங்காக்களில் புதியதாக On Site Composting Yard 15 இடங்களில் அமைக்கும் பணிக்கு பொதுநிதியின் கீழ் ரூ.42.50/-லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் நிர்வாக ஒப்புதல் பெற்று உரிய நிதி ஒதுக்கிட்டுடன் டெண்டர்கள் வரவழைக்கப்பட்டது.

டெண்டரில் கலந்து கொண்ட 2 ஒப்பந்ததாரர்களில் மதிப்பீட்டு விலையை விட 0.02% குறைவாக கொடுத்த. P.அன்னலெட்சுமி என்பவரின் ஒப்பந்தபுள்ளியை ஏற்று ஆணையாளர் மற்றும் தனிஅலுவலரின் ஒப்புதல் பெற்று வேலை துவங்கும் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட வேலை உத்தரவு காலத்திற்குள் வேலைகள் முடிவுற்ற நிலையிலான தொகை ரூ.10,84,609/-க்கு உதவி பொறியாளர் பட்டியல் தயார் செய்து வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட நிர்வாக ஒப்புதல் மற்றும் வேலை துவங்கும் உத்தரவுக்குழ் முடிக்கப்பட்ட பணிகளுக்கான பட்டியல் தொகை வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 367**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**6. E6/Est.No.248/23-24**

மதுரை மாநகராட்சி மண்டலம்–2 வார்டு எண்–31ல் உள்ள தல்லாகுளம், தமுக்கம் மைதானத்தின் உட்புறம் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்ட கலாச்சார மையத்தில் அத்தியாவசிய பணிகளான Expansion Joint, Roof Beam Concrete, Weathering Course மற்றும் Pressed Tiles வேலைகள் செய்ய வேண்டி உள்ளது.

மேற்கண்ட பணிகள் பொதுநிதியில் மேற்கொள்வதற்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.90.50 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 368**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**7. E1/007676/23**

மதுரை மாநகராட்சியிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் நிர்வாக அறிக்கை தயார் செய்து அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டிய நிலையில் 2020-21 முதல் 2022-23

வரை நிர்வாக அறிக்கை தயார் செய்து தணிக்கைக்கு சமர்ப்பிக்கவில்லை என்பதால் மேற்கண்ட நிர்வாக அறிக்கை தயார் செய்து அதன் விபரத்தை மாமன்றத்தின் தகவலுக்கு வைத்து தீர்மான நகலை அரசுக்கு அனுப்பக்கோரி AG Audit As.No.18ன் படி தடை எழுப்பப்பட்டுள்ளது.

மேற்கண்ட விபரம் தொடர்பாக மாநகராட்சியின் 2020-21 முதல் 22-23க்கு உரிய நிர்வாக அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட நிர்வாக அறிக்கையை அரசுக்கு அனுப்பி வைக்க மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு

**மாமன்றத்தீர்மானம் எண்: 369**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**8. E7/014107/23**

மதுரை மாநகராட்சி மண்டலம்.03 வார்டு எண்.55ல் உள்ள ஞாயிற்று கிழமை சந்தையின் பின்புறம் உள்ள வெலிங்டன் நகர்புற சுகாதார மையம் நடைபெற்று வருகிறது. தற்சமயம் நடைபெற்று வரும் நகர்ப்புற சுகாதார மையம் விரிவாக்கம் செய்ய ரூ.95.00/- லட்சத்திற்கு CSR நிதியின் கீழ் பணி செய்ய ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்சமயம் உள்ள வெலிங்டன் நகர்புற சுகாதார மையம் செயல்படும் இடம், விரிவாக்கம் செய்வதற்கு போதுமான இடம் இல்லை என்பதால் வார்டு எண் 51ல் உள்ள பேச்சியம்மன் படித்துறை சாலையில் உள்ள சேதாரமான பழைய கஸ்தூரிபாய் மேல்நிலைப்பள்ளி பழுதடைந்த கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தி புதிய சுகாதார மையம் கட்டுவதற்கு ஆணையாளர் அவர்களிடம் 22.11.2023 அன்று ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட சேதாரமான பழைய கஸ்தூரிபாய் மேல்நிலைப்பள்ளி பழுதடைந்த கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்துவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 370**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**9.E7/014144/23**

மதுரை மாநகராட்சி மண்டலம்.03 வார்டு எண்.52ல் உள்ள வடக்கு ஆவணி மூலவீதி அருள்மிகு மீனாட்சியம்மன் கோவில் அருகில் மதுரை மாநகராட்சி பல்லடுக்கு வாகன நிறுத்தும் இடத்தில் படி கட்டு கைபிடிகள், 2-எண்ணிக்கை Head Room கடைக்களுக்குரிய ரோலிங் சட்டர் (Rolling Shutter ) ஒவ்வொரு கடைக்கும் வயரிங் செய்து தனித்தனி EB Line பெறுவதற்கும், Flooring concrete அமைக்கவும் பொது நிதியின் கீழ் ரூ.81.50/- இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ஆணையாளர் அவர்களிடம் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட மதிப்பீட்டு பணிக்கான நிர்வாக ஒப்புதலுக்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 371**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**10.E6/014108/23**

மதுரை மாநகராட்சி மண்டலம்.05 வெள்ளக்கல் குப்பை மையத்தில் குப்பை ஏற்றி வரும் வாகனங்களை தானியங்கி முறையில் எடை அளவிடும் செய்யும் பணிக்கு

(ரூ.14.16 லட்சம் + GST உள்பட) ஆணையாளர் அவர்களிடம் நிர்வாக ஒப்புதல் பெற்று தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Director Real Tech GPS Private Ltd என்ற நிறுவனத்தின் மதிப்பீட்டு விலைவிட 0.16% குறைவாக (ரூ.14,13.640 லட்சம் 18% GST உள்பட) ஓராண்டு பராமரிப்பு கட்டணம் டெண்டர் விலைப்புள்ளியிலிருந்து 22.00% என்று தெரிவித்துள்ளதை ஏற்று ஆணையாளர் அவர்களிடம் ஒப்புதல் பெற்று வேலை துவங்கும் உத்தரவு வழங்கப்பட்டது

மேற்கண்ட விவரப்படி ஆணையாளரிடம் பெறப்பட்ட நிர்வாக ஒப்புதல் மற்றும் வேலை உத்தரவுக்கும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 372**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**11. மந4/14837/2023**

மதுரை மாநகராட்சி 5 மண்டலம் 100 வார்டு பகுதிகளில் டெங்கு கொசுபுழு ஒழிப்பு பணி மேற்கொள்ள கொசு ஒழிப்பு புகை மருந்து அடிக்கும் இயந்திரங்கள் கீழ்க்கண்டவாறு அரசு நிர்ணயித்த Gem-rateல் M/s.Skyfog Private Limited, Chennai நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டமைக்கும், பட்டியல் தொகை வழங்குவதற்க்கும் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு

| S.No | Zone | Description of work | Unit (No) | Rate (in Rs.) | Required Quantity (nos) | Amount (in Rs.) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 to 5 | Pulse Jet type portable fogging machine | 1 | 83,994 | 25 | 20,99,838/- |

**மாமன்றத்தீர்மானம் எண்: 373**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**12. மந4/14838/2023**

மதுரை மாநகராட்சி 5 மண்டலம் 100 வார்டு பகுதிகளில் டெங்கு கொசுபுழு ஒழிப்பு பணி மேற்கொள்ள கொசு ஒழிப்பு புகை மருந்து அடிக்கும் இயந்திரங்கள் கீழ்க்கண்டவாறு அரசு நிர்ணயித்த Gem-rateல் M/s.Skyfog Private Limited, Chennai நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டமைக்கும், பட்டியல் தொகை வழங்குவதற்க்கும் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு

| S.No | Zone | Description of work | Unit (No) | Rate (in Rs.) | Required Quantity (nos) | Amount (in Rs.) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 to 5 | Vehicle Mounted fogging machine | 1 | 5,79,699 | 4 | 23,18,796/- |

**மாமன்றத்தீர்மானம் எண்: 374**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**13. H1/010336/2022**

மதுரை மாநகராட்சி ஐந்து மண்டலங்களில் 1 முதல் 100 வார்டு பகுதிகளில் சாலையின் இருபக்கங்களிள் தேங்கியுள்ள மண் குவியல், மர குப்பை குவியல்கள்,

முக்கியமான இடங்களான நீதிமன்றங்கள், நீதிபதி குடியிருப்பு, காவலர்கள் குடியிருப்பு போன்ற இடங்களில் தேங்கும் மரகுப்பைகள் மற்றும் கழிவுகள் மேலும் பாதாளசாக்கடையிலிருந்து பெறப்படும் கழிவுகள், மின்சார வாரியத்தில் வெட்டப்படும் மரங்களின் கிளை குப்பைகள், மேலும் முக்கியமான தலைவர்கள்(VIP) பங்கு பெறும் நிகழ்வுகளில் ஏற்படும் கழிவுகள் ஆகியவற்றை அள்ளி அப்புறப்படுத்த 28 டிராக்டகள் வெளிக்கொணர்வு முறையில் விநியோக செய்ய தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்க விளம்பர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது

மேற்படி பிரபல நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு M/s.MAA COMMUNICATION LIMITED., நிறுவனத்திற்கு ரூ.1,16,445/- செலவினமாக வழங்கியமைக்கு மாமன்றத்தின் பதிவிற்கு வைக்கும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 375**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**14.H1/011637/2022**

மதுரை மாநகராட்சி ஐந்து மண்டலங்களில் உள்ள 100 வார்டுகளுக்கு அனைத்து பகுதிகளுக்கும் டெங்கு உள்ளிட்ட காய்ச்சலை தடுக்கும் பொருட்டு வெளிப்புறங்களில் கொசு ஒழிப்பு புகைப்பரப்பும் பணி செய்திட Malathion Technical Grade கொள்முதல் செய்வதற்கு விலைப்புள்ளி பெற்று, இதில் மிகக் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M/s. SUDARSAN BIOCHEM., நிறுவனத்திற்கு 09.11.2023–ல் சப்ளை உத்தரவு வழங்கப்பட்டது.

மேற்படி 2023–2024–ம் ஆண்டிற்கு முதற்கட்டமாக Malathion Technical Grade 1200 லிட்டர் கொள்முதல் செய்வதற்கு செலவினமாக ரூ.13,72,800/- வழங்குவதற்கு மாமன்றத்தின் பதிவிற்கு வைக்கும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 376**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**15.H1/011638/2022**

மதுரை மாநகராட்சி ஐந்து மண்டலங்களில் உள்ள 100 வார்டுகளுக்கு அனைத்து பகுதிகளுக்கும் டெங்கு உள்ளிட்ட காய்ச்சலை தடுக்கும் பொருட்டு கொசு ஒழிப்பு புகைப்பரப்பும் பணி செய்திட Pyrethurum 2% Extract மருந்து விலைப்புள்ளி வழங்கி **Tamilnadu Medical Services Corporation LTD** தெரிவு செய்யப்பட்ட ஆங்கிகாரம் பெற்ற **M/s. NITAPOL INDUSTRIES.**, நிறுவனத்திற்கு 31.10.2023–ல் சப்ளை உத்தரவு வழங்கப்பட்டது.

மேற்படி 2023–2024–ம் ஆண்டிற்கு முதற்கட்டமாக Pyrethurum 2% Extract 1200 லிட்டர் கொள்முதல் செய்வதற்கு செலவினமாக ரூ.14,27,328/- வழங்குவதற்கு மாமன்றத்தின் பதிவிற்கு வைக்கும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 377**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**16.H1/002778/2023**

மதுரை மாநகராட்சி ஐந்து மண்டலங்களில் உள்ள 100 வார்டுகளில் அனைத்து பகுதிகளுக்கும் சுகாதார பணிக்கு தேவையான கிருமி நாசினி பொருட்களான

பிளிச்சிங் பவுடர் கொள்முதல் செய்வதற்க்கு விலைப்புள்ளி பெற்று, இதில் மிகக்குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M/S SVR Traders நிறுவனத்திற்க்கு 09.11.2023 ல் சப்ளை உத்தரவு வழங்கப்பட்டது.

மேற்படி **2023–2024**–ம் ஆண்டிற்கு முதற்கட்டமாக பிளிச்சிங் பவுடர் **10**டன் கொள்முதல் செய்ததற்கு செலவினமாக ரூ.3,99,902/- வழங்குவதற்கு மாமன்றத்தின் பதிவிற்கு வைக்கும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 378**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**17.H1/027690/2016**

மதுரை மாநகராட்சி ஐந்து மண்டலங்களில் உள்ள 100 வார்டுகளில் அனைத்து பகுதிகளுக்கும் சுகாதார பணிக்கு தேவையான கிருமி நாசினி பொருட்களான நீர்த்த சுண்ணாம்புத்தூள் கொள்முதல் செய்வதற்க்கு விலைப்புள்ளி பெற்று, இதில் மிகக்குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M/S SVR Traders நிறுவனத்திற்க்கு 09.11.2023 ல் சப்ளை உத்தரவு வழங்கப்பட்டது.

மேற்படி **2023–2024**–ம் ஆண்டிற்கு முதற்கட்டமாக நீர்த்த சுண்ணாம்புத்துாள் **30**டன் கொள்முதல் செய்ததற்கு செலவினமாக ரூ.2,69,955/- வழங்குவதற்கு மாமன்றத்தின் பதிவிற்கு வைக்கும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 379**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**18. ந.க.எண்.ஓ4/010536/2021**

மதுரை மாநகராட்சி நிர்வாகத்தின் கீழ் இயங்கி வரும் ஆரம்ப மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் செயல்பட்டு வரும் LKG மற்றும் UKG வகுப்புகளுக்கு நிர்வாக நலன் கருதியும், மாணவர்களின் நலன் கருதியும் 75 KG ஆசிரியர்கள் மற்றும் **63** உதவியாளர்களுக்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்டிருந்த பணிக்காலம் 07.12.2023ந் தேதியுடன் முடிவடைந்துள்ளது.

எனவே, LKG மற்றும் UKG வகுப்புகளில் கற்றல் கற்பித்தல் பணிகளை இடையூறின்றி மேற்கொள்ள ஏதுவாக நிர்வாக நலன் மற்றும் மாணவர் நலன் கருதி நடப்பு **2023–2024**ஆம் கல்வியாண்டில் 11.12.2023ந் தேதி முதல் **75** KG **ஆசிரியர்கள் மற்றும்** 63 **உதவியாளர்களை 89** நாட்கள் மட்டும் முற்றிலும் தற்காலிகமாக பணியமர்த்திக் கொள்வதற்கும், 75 KG ஆசிரியர்களுக்கு மாதாந்திர மதிப்பூதியம் ரூ.8000/- மற்றும் 63 உதவியாளர்களுக்கு மாதாந்திர மதிப்பூதியம் ரூ.3500/- வழங்குவதற்கும், இதனால் ஏற்படும் உத்தேச செலவினத் தொகையான KG ஆசிரியர்களுக்கான ஊதியத் தொகை (நாள் ஒன்றுக்கு ஊதியம் ரூ.267 x 89 நாட்கள் x 75 நபர்கள்) ரூ.17,82,225/- (ரூபாய் பதினேழு இலட்சத்து எண்பத்து இரண்டாயிரத்து இருநூற்று இருபத்து ஐந்து மட்டும்)– னையும் மற்றும் உதவியாளர்களுக்கான ஊதியத் தொகை (நாள் ஒன்றுக்கு ஊதியம் ரூ.117 x 89 நாட்கள் x 63 நபர்கள்) ரூ.6,56,019/- (ரூபாய் ஆறு இலட்சத்து ஐம்பத்து ஆறாயிரத்து பதினொன்பது மட்டும்)– னையும் மாநகராட்சி கல்விநிதியிலிருந்து பெற்று வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

நிபந்தனைகள் :

1. இந்த பணியானது முற்றிலும் தற்காலிகமானது.
2. இந்த தற்காலிக பணியின் மூலம் வருங்காலங்களில் பணிநிரந்தரமோ, பணிமுன்னுரிமையோ வழங்கப்பட மாட்டாது.
3. முந்தைய பணிக்காலம் ஏதுமிருப்பின் பின் தொடர்ச்சி ஏதுமின்றி முந்தைய பணிக்காலம் இதன் மூலம் முற்றிலும் துண்டிக்கப்படுகிறது.
4. இது முற்றிலும் புதிய தற்காலிக பணியமர்வாகும்.
5. இந்த ஆணையின்படி பணியமர்த்தப்படுபவர்கள் எவ்வித முன்னறிவிப்பின்றியும் எந்த நேரத்திலும் மாநகராட்சி பணியிலிருந்து விடுவிக்கப்படுவர்.
6. முந்தைய பணிக்காலம் மற்றும் தற்போதைய பணிக்காலம் யாவும் பின்வரும் காலங்களில் தொடர் பணியாக கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.
7. இதனிடையில் அரசு மூலம் ஆசிரியர்கள் நியமனம் ஏதும் செய்யப்படும் பட்சத்தில் தற்காலிக KG ஆசிரியர்கள் மற்றும் உதவியாளர்கள் மாநகராட்சி பணியிலிருந்து எவ்வித முன்னறிவிப்பின்றி உடனடியாக விடுவிக்கப்படுவர்.

<u>மாமன்றத்தீர்மானம் எண்: 380</u>

<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>

**<u>19. ந.க.எண். ஒ4/015135/2021</u>**

மதுரை மாநகராட்சி நிர்வாகத்தின் கீழ் இயங்கும் 15 மேல்நிலைப்பள்ளிகளில் நிர்வாக நலன் கருதியும், பள்ளி மாணாக்கர்களின் நலன் கருதியும் முற்றிலும் தற்காலிக அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட 38 முதுகலை பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்டிருந்த பணிக்காலம் வரும் 08.12.2023ந் தேதியுடன் முடிவடைந்துள்ளது.

எனவே, மேல்நிலை வகுப்புகளில் கற்றல் கற்பித்தல் பணிகளை இடையூறின்றி மேற்கொள்ள ஏதுவாக நிர்வாக நலன் மற்றும் மாணவர் நலன் கருதி நடப்பு 2023–2024ஆம் கல்வியாண்டில் 11.12.2023ந் தேதி முதல் 38 முதுகலை பட்டதாரி ஆசிரியர்களை முற்றிலும் தற்காலிகமாக பணியமர்த்திக் கொள்வதற்கும், அன்னார்களுக்கு நபர் ஒருவருக்கு மாதாந்திர மதிப்பூதியத் தொகை ரூ.13,000/- வீதம் வழங்குவதற்கும், இதனால் ஏற்படும் உத்தேச செலவினத் தொகை (நாள் ஒன்றுக்கு ஊதியம் ரூ.433 x 89 நாட்கள் x 38 நபர்கள்) ரூ.14,64,406/- (ரூபாய் பதினான்கு இலட்சத்து அறுபத்து நான்காயிரத்து நானூற்று ஆறு மட்டும்)– னை மாநகராட்சி கல்விநிதியிலிருந்து பெற்று வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

<u>நிபந்தனைகள் :</u>

1. இந்த பணியானது முற்றிலும் தற்காலிகமானது.
2. இந்த தற்காலிக பணியின் மூலம் வருங்காலங்களில் பணிநிரந்தரமோ, பணிமுன்னுரிமையோ வழங்கப்பட மாட்டாது.
3. முந்தைய பணிக்காலம் ஏதுமிருப்பின் பின் தொடர்ச்சி ஏதுமின்றி முந்தைய பணிக்காலம் இதன் மூலம் முற்றிலும் துண்டிக்கப்படுகிறது.
4. இது முற்றிலும் புதிய தற்காலிக பணியமர்வாகும்.
5. இந்த ஆணையின்படி பணியமர்த்தப்படுபவர்கள் எவ்வித முன்னறிவிப்பின்றியும் எந்த நேரத்திலும் மாநகராட்சி பணியிலிருந்து விடுவிக்கப்படுவர்.

6. முந்தைய பணிக்காலம் மற்றும் தற்போதைய பணிக்காலம் யாவும் பின்வரும் காலங்களில் தொடர் பணியாக கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.
7. இதனிடையில் அரசு மூலம் ஆசிரியர்கள் நியமனம் ஏதும் செய்யப்படும் பட்சத்தில் இந்த தற்காலிக முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் மாநகராட்சி பணியிலிருந்து எவ்வித முன்னறிவிப்பின்றி உடனடியாக விடுவிக்கப்படுவர்.

**மாமன்றத்தீர்மானம் எண்: 381**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**20. ந.க.எண். ஓ4/017586/2021**

மதுரை மாநகராட்சி நிர்வாகத்தின் கீழ் இயங்கி வரும் **96** பள்ளிகளில் சுகாதார நலன் பேணும் பொருட்டும் நிர்வாக நலன் கருதியும், பள்ளி மாணாக்கர்களின் சுகாதார நலன் கருதியும் முற்றிலும் தற்காலிகமாக அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வரும் **120** தூய்மை பணியாளர்களுக்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்டிருந்த பணிக்காலம் 08.12.2023ந் தேதியுடன் முடிவடைந்துள்ளது.

எனவே, மதுரை மாநகராட்சி **96** பள்ளிகளின் சுகாதார நலன் மற்றும் மாணவர்களின் சுகாதார நலன் கருதி நடப்பு **2023–2024**ம் கல்வியாண்டிற்கு **120** தூய்மை பணியாளர்களை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை எண்.21787/2021/EA2 நாள் : 28.10.2021ல் நிர்ணயம் செய்துள்ளவாறு நாள் ஒன்றுக்கு ரூ.391/- மட்டும் ஊதியம் என்ற அடிப்படையில் 11.12.2023 முதல் 89 நாட்கள் வரை முற்றிலும் தற்காலிகமாக பணியமர்த்திக் கொள்வதற்கும், இதனால் ஏற்படும் உத்தேச செலவினத் தொகை (நாள் ஒன்றுக்கு ஊதியம் ரூ.391 x 89 நாட்கள் x 120 நபர்கள்) ரூ.41,75,880/- (ரூபாய் நாற்பத்து ஒரு இலட்சத்து எழுபத்து ஐந்தாயிரத்து எண்ணூற்று எண்பது மட்டும்)–னை மாநகராட்சி கல்விநிதியிலிருந்து பெற்று வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

நிபந்தனைகள் :

1. இந்த பணியானது முற்றிலும் தற்காலிகமானது.
2. இந்த தற்காலிக பணியின் மூலம் வருங்காலங்களில் பணிநிரந்தரமோ, பணிமுன்னுரிமையோ வழங்கப்பட மாட்டாது.
3. முந்தைய பணிக்காலம் ஏதுமிருப்பின் பின் தொடர்ச்சி ஏதுமின்றி முந்தைய பணிக்காலம் இதன் மூலம் முற்றிலும் துண்டிக்கப்படுகிறது.
4. இது முற்றிலும் புதிய தற்காலிக பணியமர்வாகும்.
5. இந்த ஆணையின்படி பணியமர்த்தப்படுபவர்கள் எவ்வித முன்னறிவிப்பின்றியும் எந்த நேரத்திலும் மாநகராட்சி பணியிலிருந்து விடுவிக்கப்படுவர்.
6. முந்தைய பணிக்காலம் மற்றும் தற்போதைய பணிக்காலம் யாவும் பின்வரும் காலங்களில் தொடர் பணியாக கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.
7. பள்ளி வேலை நாட்களுக்கு மட்டும் ஊதியம் வழங்கப்படும்.
8. ஒரே நபரை தொடர்ந்து பணியமர்த்துக் கொள்ள வேண்டியதில்லை.

9. பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மாதந்தோறும் கல்வி அலுவலரிடம் சமர்ப்பிக்கும் வருகைப் பதிவேட்டினை அடிப்படையாக கொண்டு அந்த மாதத்திற்கான ஊதியம் வழங்கப்படும்.

**மாமன்றத்தீர்மானம் எண்: 382**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**21.அ3/014110/2021**

மதுரை மாநகராட்சி பொது நிர்வாகப் பிரிவில் பணியமைப்பு தொடர்பான பணிகளை மேற்கொ்ளள, துணை ஆட்சியர் (ஓய்வு) நிலையில் திருமதி. G.உஷா என்பவரும், மதுரை மாநகராட்சி கணக்குப் பிரிவில் ஒப்பந்த பணியாளர்களுக்கு வழங்கப்படும் ESI மற்றும் EPF ஐ கண்காணிக்க, ஆணையாள்ா – II (ஓய்வு) நிலையில் திரு.S.சங்கரலிங்கம் என்பவரும் மற்றும் மதுரை மாநகராட்சி கணக்குப்பிரிவில் தணிக்கைத்தடை பத்திகள் தொடர்பான பணிகளை மேற்கொள்ள, உதவி சம்பளக்கணக்கு அலுவலர்(ஓய்வு) நிலையில் திரு.M.கருணாகரன் என்பவரும், மதிப்பூதியம் மாதம் ஒன்றுக்கு ரூ.30,000/- அடிப்படையில் தற்காலிக ஆலோசகர்களாக செப்டம்பர்–2021 முதல் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களுக்கு மதிப்பூதியம் மதுரை மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகின்றது மேற்கண்ட மூன்று தற்காலிக ஆலோசகர்களின் ஒப்பந்த பணிக்காலம் ஆகஸ்ட்–2023 உடன் முடிவடைந்துவிட்டதால், தனியர்களின் ஒப்பந்த பணிக்காலத்தை மேலும் ஆறு மாதங்களுக்கு (செப்டம்பர்– 2023 முதல் பிப்ரவரி–2024 வரை) கால நீட்டிப்பு செய்தும், ஒப்பந்த அடிப்படையில் மதிப்பூதியம் வழங்க ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.30,000/- X 3 = ரூ.90,000/- ஆறு மாதங்களுக்கு ரூ.90,000/- x 6 = ரூ.5,40,000/- ஆகும். மேற்கண்ட மூன்று ஆலோசகர்களுக்கும் ஒப்பந்த பணிக்காலத்தை செப்டம்பர் 2023 முதல் பிப்ரவரி 2024 வரை ஆறு மாதங்களுக்கு கால நீட்டிப்பு செய்வதற்கும், (செப்டம்பர் – 2023 முதல் நவம்பர்–2023 வரை) மூன்று மாதங்களுக்கு ரூ.90,000/- x 3 = 2,70,000/- மதிப்பூதியம் வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 383**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**22. E7/Est.No.219/23-24**

மதுரை மாநகராட்சி மண்டலம்–4 வார்டு எண்–42ல் உள்ள தெப்பக்குளம் மேற்கு பகுதியில் 3–எண்ணிக்கை உயர் கோபுர மின்விளக்கு அமைக்க ரூ.30.00/- லட்சத்திற்கும் தெப்பக்குளம் வடக்கு பகுதியில் 2–எண்ணிக்கை உயர் கோபுர மின்விளக்கு அமைக்க ரூ.25.00/- லட்சத்திற்கும் மொத்தம் 5–உயர் கோபுர மின்விளக்குகள் அமைக்க மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் (மக்களவை) அவர்களால் நிதி ஒதுக்கப்பட்டு மதிப்பீடு அனுப்பக்கோரி மாவட்ட ஆட்சி தலைவர் அலுவலகத்திலிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது.

மேற்கண்ட உயர் கோபுர மின்விளக்குகளை அமைத்து உபயோகப்படுத்திட மின்கட்டணம் மற்றும் பராமரிப்பு செலவினத்தை மேற்கொள்வதற்கான நிதி ஆதாரத்தை தீர்மானமாக நிறைவேற்றி அதன் நகலினை மதிப்பீட்டுடன் அனுப்பி வைக்க கோரி ந.க.எண்.124/2020/டி2 நாள் : 13.10.2023ன் படி கடிதம் வரப்பெற்றுள்ளது. மின் உதவிபொறியாளரின் குறிப்பின்படி ஒரு மாத்திற்கு ஒரு உயர் கோபுர

மின்விளக்கிற்கு மின் துய்ப்பு கட்டணம் உத்தேசமாக ரூ.10280/- ஆகும். 5-உயர்கோபுர மின் விளக்குகளுக்கு ஏற்படும் மின் துய்ப்பு கட்டணம் மாதம் ரூ.51,400/-க்கான செலவினத்தை பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு

**மாமன்றத்தீர்மானம் எண்: 384**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**23.E6/Est.No.346/23-24**

மதுரை மாநகராட்சி மண்டலம்–5 வார்டு எண் 92 & 100 அவனியாபுரம் பகுதியில் ஜல்லிகட்டு நடத்துவதற்கு மேடைகள், தடுப்பு வேலிகள், மற்றும் குடிநீர் தொட்டிகள் அமைக்கும் பணிக்கு பொதுநிதியின் கீழ் 2023-2024ம் ஆண்டு விலை விகிதத்தின் படி ரூ.26.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ஆணையாளர் அவர்களிடம் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மேற்கண்ட மதிப்பீடு தொகைக்கு ஆணையாளர் அவர்களிடம் பெற்றப்பட்ட ஒப்புதலுக்கும் உரிய வழிமுறையில் ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கவும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு

**மாமன்றத்தீர்மானம் எண்: 385**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**24. E6/Est.No.296/23-24**

மதுரை மாநகராட்சி மண்டலம்–2 வார்டு எண் 31 தமுக்கம் மெயின் ரோட்டில் உள்ள ஆணையாளர் அவர்களின் முகாம் அலுவலகத்தின் மேற்கூரையில் தட்டோடு பதிக்கும் பணி மற்றும் மராமத்து பணிகள் செய்வதற்கு பொது நிதியின் கீழ் 2023-2024ம் ஆண்டு விலை விகிதப்படி ரூ.9.80 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ஆணையாளர் அவர்களிடம் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மேற்கண்ட மதிப்பீடு தொகைக்கு ஆணையாளர் அவர்களிடம் பெற்றப்பட்ட ஒப்புதலுக்கும் உரிய வழிமுறையில் ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கவும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு

**மாமன்றத்தீர்மானம் எண்: 386**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**25. E1/015060/23**

மதுரை மாநகராட்சி வார்டுகளில் அமைந்துள்ள 15 எண்ணிக்கை சமுதாய கழிப்பறைகளை CSR நிதியின் கீழ் சொந்த செலவில் புனரமைப்பு செய்து புதுப்பித்து தருவதற்கு Gramalaya என்ற நிறுவனம் அனுமதி கோரியதை பரிசீலனை செய்து மேற்கண்ட நிறுவனத்திற்கு கீழ்க்கண்ட விவரப்படி ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெற்று அனுமதி வழங்கப்பட்டது.

| S.No | Name of the Community Toilet | Ward |
|---|---|---|
| 1 | SR Nagar Gandhipuram, Puthur | 12 |
| 2 | Anaiyur Main Road Anaiyur | 3 |
| 3 | Anaiyur Bus Stand | 3 |
| 4 | AD Colony Thiruppalai | 7 |
| 5 | Kochadi Bus Stop | 66 |
| 6 | Mela Kanmai Street, Thallakulam | 2 |

| S.No | Name of the Community Toilet | Ward |
|---|---|---|
| 7 | Kattu Naiyackan Colony | 56 |
| 8 | Kamarajapuram Market | 45 |
| 9 | Mahali Patti, Keeraithurai | 87 |
| 10 | Anuppanandi Housing Board | 89 |
| 11 | Theppakulam Puthu Ramnad Road | 42 |
| 12 | Annanagar Pasumalai | 93 |
| 13 | Uzhavar Sandi, Palanganatham | 74 |
| 14 | Dopi Colony Harvy Patty | 96 |
| 15 | Thiruparangundram Bus Stop | 99 |

மேற்கண்ட விவரப்படி ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெற்று Gramalaya நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட அனுமதி உத்தரவுக்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 387**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**26. E7/Est.No.291/23-24**

மதுரை மாநகராட்சிக்கு உட்பட்ட அனைத்து மண்டலங்களிலும் கீழ்கண்ட விவரப்படி மேல்நிலை தொட்டிகளை சரி செய்யும் பணிக்கு குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் 2023-2024ம் ஆண்டு விலை விகிதப்படி மதிப்பீடுகள் தயார் செய்து ஆணையாளர் அவர்களின் ஒப்புதலுடன் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. கீழ்கண்ட மதிப்பீடுகளுக்கு உரிய வழிமுறையில் ஒப்பந்தபுள்ளி வரவழைக்கம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| வ.எ | கோப்பு எண்/ பணி விபரம் | மதிப்பீட்டு தொகை (Rs. In Lakhs) |
|---|---|---|
| 1 | E7/Est.No.291/23-24<br>மண்டலம்–3 வார்டு எண் 57ல் உள்ள ஆரப்பாளையம் மேல்நிலைத் தொட்டி எண்.1 (Old OHT) மராமத்து பணி | 16.50 |
| 2 | E1/Est.No.292/23-24<br>மண்டலம்–1 வார்டு எண் 17ல் உள்ள S.ஆலங்குளத்தில் உள்ள மேல்நிலைத் தொட்டி மராமத்து பணி | 16.60 |
| 3 | E2/Est.No.282/23-24<br>மண்டலம்–1 வார்டு எண் 5ல் உள்ள தபால் தந்தி நகரில் உள்ள மேல்நிலைத் தொட்டி மராமத்து பணி | 26.50 |
| 4 | E6/014744/23<br>மண்டலம்–2 வார்டு எண் 2 மற்றும் 20ல் உள்ள அஞ்சல்நகர், இரயிலார் மற்றும் பழைய விளாங்குடி மந்தையில் உள்ள மேல்நிலைத் தொட்டி மராமத்து பணி | 16.00 |

மேற்கண்டவாறு ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்ட நிர்வாக ஒப்புதலுக்கும் உரிய வழிமுறையில் ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கவும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 388**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**27. E1/Est.No.269/23-24**

மதுரை மாநகராட்சிக்கு உட்பட்ட அனைத்து மண்டலங்களிலும் கீழ்கண்ட விவரப்படி மழை மற்றும் இயற்கை இடர்பாடுகளினால் சேதம் அடைந்த சாலை பள்ளங்களை சரிசெய்யும் பணிக்கு (Patch Work) பொது நிதியின் கீழ் மதிப்பீடுகள் தயார் செய்து ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெற்று உரிய வழிமுறையில் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு வேலை உத்தரவு வழங்கப்பட்டது.

| வ.எ | கோப்பு எண்/ பணி விபரம் | மதிப்பீட்டு தொகை (Rs. In Lakhs) | L1 ஒப்பந்ததாரர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | E1/Est.No.269/23-24<br>மண்டலம்–1 வார்டு எண் 10ல் உள்ள சாலையில் உள்ள பள்ளங்களை சரி செய்யும் பணி | 9.30 | Vignesh Moorthi | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 1.22% குறைவு |
| 2 | E1/Est.No.281/23-24<br>மண்டலம்–5 வார்டு எண் 80, 81, 82, 83, 84, 92, 94ல் உள்ள சாலையில் உள்ள பள்ளங்களை சரி செய்யும் பணி | 10.50 | Arunchaleswarar Construction | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 1.20% குறைவு |
| 3 | E1/Est.No.276/23-24<br>மண்டலம்–1 வார்டு எண் 16ல் உள்ள ரத்தினசாமி நாடார் மெயின் ரோடு மற்றும் கிருஷ்ணாபுரம் காலனி மெயின் சாலையில் உள்ள பள்ளங்களை சரி செய்யும் பணி | 5.00 | Vignesh Moorthi | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 1.20% குறைவு |
| 4 | E6/Est.No.268/23-24<br>மண்டலம்–2க்கு உட்பட்ட பகுதிகளில் சாலை பள்ளங்களை சரி செய்யும் பணி | 9.90 | Vignesh Moorthi | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 1.20% குறைவு |
| 5 | E7/Est.No.279/23-24<br>மண்டலம்–3 வார்டு எண் 50, 51, 54, 55, 56, 57, 76ல் உள்ள சாலையின் பள்ளங்களை சரி செய்யும் பணி | 9.95 | V.Pandi | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 1.20% குறைவு |
| 6 | E6/Est.No.263/23-24<br>மண்டலம்–4க்கு உள்ள மெயின் சாலைகளில் உள்ள பள்ளங்களை சரி செய்யும் பணி | 9.99 | V.Pandi | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 1.20% குறைவு |

மேற்கண்டவாறு ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்ட நிர்வாக ஒப்புதல் மற்றும் வேலை துவங்கும் உத்தரவுக்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 389**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**28. மதி2/008607/2023**

மதுரை மாநகராட்சி – மத்திய திட்டம் – மதுரை வடக்கு வட்டம் – மண்டலம் 1 – தத்தனேரி கிராமம், வார்டு : 03 – சர்வே எண்கள்: 10/8pt, 10/15pt, 10/16pt, 13/1A1pt, 13/1A2pt, 13/1A3pt, 13/1B1pt, 13/1B2, 13/2pt, 13/4Apt, 13/4Bpt, 13/5pt, 13/8 & 9Apt, 15/3pt–ல் 3.01 ஏக்கர் (12181.03 சதுர மீட்டர்) பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க. உத்தேச சாலை மற்றும் உள்ளாட்சி அமைப்பிற்கான இடத்தினை ஆணையாளர், மதுரை மாநகராட்சி பெயருக்கு பத்திர பதிவு செய்து அதன் அசல் ஆவணங்களுடன் உதவி இயக்குநர், உறுப்பினர் செயலர்(பொ), மதுரை மாவட்டம் நகர்

ஊரமைப்பு அலுவலகம். மதுரை அவர்களின் ந.க.எண்: 4243/2021/மதி2, நாள்: 27.01.2022-ம் தேதிய செயல்முறை ஆணை பிறப்பிக்கப்பட்டு இவ்வலுவலகம் வரப்பெற்றுள்ளது.

மேற்கண்ட மதுரை மாநகராட்சி – மத்திய திட்டம் – மதுரை வடக்கு வட்டம் – மண்டலம் 1 – தத்தனேரி கிராமம், வார்டு : 03 – சர்வே எண்கள்: 10/8pt, 10/15pt, 10/16pt, 13/1A1pt, 13/1A2pt, 13/1A3pt, 13/1B1pt, 13/1B2, 13/2pt, 13/4Apt, 13/4Bpt, 13/5pt, 13/8 & 9Apt, 15/3pt–ல் **3.01** ஏக்கர் (**12181.03** சதுர மீட்டர்) பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவில் அமையும் **சாலைக்கான இடம் Iவது (1–1) சாலையானது 71.86 மீட்டர் நீளமும், 09.00 மீட்டர் அகலமும (30 அடி சாலையாகவும்), சாலைக்கான இடம் IIவது (2–2) சாலையானது 71.24 மீட்டர் நீளமும், 07.20 மீட்டர் அகலமும (23 அடி சாலையாகவும்), சாலைக்கான இடம் IIIவது (3–3) சாலையானது 44.27 மீட்டர் நீளமும், 07.20 மீட்டர் அகலமும (23 அடி சாலையாகவும்), சாலைக்கான இடம் IVவது (4–4) சாலையானது 48.81 மீட்டர் நீளமும், 07.20 மீட்டர் அகலமும (23 அடி சாலையாகவும்), சாலைக்கான இடம் Vவது (5–5) சாலையானது 124.19 மீட்டர் நீளமும், 09.00 மீட்டர் அகலமும (30 அடி சாலையாகவும்),** மூலை முடக்கு உட்பட மொத்தம் **2969.66 சதுர மீட்டர் இடத்தினை பத்திரம் எண்: 2684/2023, நாள்: 23.05.2023-ம் தேதி மற்றும் உள்ளாட்சி அமைப்புக்கான இடம் - 47.99 சதுர மீட்டர் இடத்தினை பத்திரம் எண்: 2684/2023, நாள்: 23.05.2023-தேதியில** மதுரை மாவட்டம், மதுரை வடக்கு பதிவு மாவட்டம், சொக்கிக்குளம் சார்பதிவகம், தற்சமயம் விளாங்குடி சார்பதிவகம், மதுரை வடக்கு வட்டம், தத்தனேரி கிராமம், ஆணையாளர் மதுரை மாநகராட்சி என்ற பெயருக்கு பதிந்த அசல் ஆவணங்கள் மற்றும் மனைப்பிரிவில் தார் சாலை அமைத்து அதன் புகைப்படம் ஆகியவற்றை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி சாலை மற்றும் உள்ளாட்சி அமைப்புக்கான இடங்களை மாநகராட்சி வசம் உள்ள சாலை பதிவேட்டில் பதிவு செய்ய (Road Register) UTIS மென்பொருளில் பதிவு செய்து காலிமனை வரிவிதித்தற்கும் நகரமைப்பு குழு ஒப்புதல் பெறப்பட்டு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 390**

**பின்னேற்புசெய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**29. மந4/003591/2022**

மதுரை மாநகராட்சி பகுதிகளில் தெருநாய்களை கருத்தடை அறுவை சிகிச்சை செய்திடவும் மற்றும் ரேபிஸ் தடுப்பூசி செலுத்தவும் M/s.CARE Trust, Madurai என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட வேலை உத்தரவு 30.04.2022 அன்று முடிவடைந்த நிலையில், 01.05.2022 முதல் 03.11.2023 வரை நீட்டிப்பு செய்யப்பட்டதை மாமன்றத்தின் பின்னேற்பிற்கு வைக்கப்படும் ஆணையாளரின் குறிப்பு மற்றும் மார்ச்2022 முதல் அக்டோபர் 2023 வரை 3468 தெரு நாய்களுக்கு கருத்தடை மற்றும் ரேபிஸ் தடுப்பூசி செலுத்தப்பட்டமைக்கு ரூ.20,80,800/- (ரூபாய் இருபது லட்சத்து எண்பதாயிரத்து எந்நூறு) மட்டும் வழங்கிட மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 391**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**30. மந4/003591/2022**

மதுரை மாநகராட்சி பகுதிகளில் தெருநாய்களை கருத்தடை அறுவை சிகிச்சை செய்திடவும் மற்றும் ரேபிஸ் தடுப்பூசி செலுத்தவும் பணி மேற்கொண்டுள்ள M/s.CARE

Trust, Madurai என்ற நிறுவனத்திற்கு 04.11.2023 முதல் ஒரு வருடத்திற்கு பணி நீட்டிப்பு வழங்கவும் மற்றும் அதற்கான கட்டணத்தை அரசாணை எண் (4D) : 01 கால்நடை பராமரிப்பு , மீன்பிடி மற்றும் மீனவர்நலன் (AH3) துறை, நாள் : 17.03.2023 மற்றும் சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் எண் : Roc.20383/2022/H1 நாள் : 07.09.2023-ன்படி நாய் ஒன்றுக்கு ரூ.1,450/- என நிர்ணயம் செய்து வழங்குவதற்கும் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்: 392</u>**

**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>**

**<u>31.ந.க.எண்.015441/ஒ2/2023</u>**

மதுரை மாநகராட்சியின் நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டு வரும் உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரையிலான மாணவ, மாணவியர்களின் பயன்பாட்டிற்காக 231 Modular Dual Desk மற்றும் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரையிலான மாணவ, மாணவியர்களின் பயன்பாட்டிற்காக 426 Modular Dual Desk ஆக மொத்தம் 657 எண்ணிக்கைகள் Modular Dual Desk- களை M/s.Tansi நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்வதற்கும், இதற்கான உத்தேச செலவினத் தொகையினை GST 18% உட்பட ரூ.79,42,737/-னை (ரூபாய் எழுபத்து ஒன்பது இலட்சத்து நாற்பத்து இரண்டாயிரத்து எழுநூற்று முப்பத்து ஏழு மட்டும்) மதுரை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

குறிப்பு:

6 முதல் 8ஆம் வகுப்பு வரை ஒரு டெஸ்க்கின் உத்தேச விலை ரூ.9639/- + GST 18 % ரூ.1735/-

9 முதல் 12ஆம் வகுப்பு வரை ஒரு டெஸ்க்கின் உத்தேச விலை ரூ.10574/- + GST 18 % ரூ.1903/-

**<u>மாமன்றத்தீர்மானம் எண்: 393</u>**

**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>**

**<u>32. மதி5/005922/2023</u>**

மதுரை மாநகராட்சி – மத்திய திட்டம் – மதுரை தெற்கு வட்டம் – மண்டலம் **5** – அவனியாபுரம் கிராமம், வார்டு : **92** – சர்வே எண்கள்: 526/1A1, 1B, 3A–ல் **1.92** ஏக்கர் **(7758.00** சதுர மீட்டர்) பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க. உத்தேச சாலை மற்றும் உள்ளாட்சி அமைப்பிற்கான இடத்தினை ஆணையாளர், மதுரை மாநகராட்சி பெயருக்கு பத்திர பதிவு செய்து அதன் அசல் ஆவணங்களுடன் உதவி இயக்குநர், உறுப்பினர் செயலர்(பொ) மதுரை மாவட்டம் நகர் ஊரமைப்பு அலுவலகம். மதுரை அவர்களின் ந.க.எண்: 10116/2023/SWP-KULG2H8X/2022/TCP, Dt: 10.05.2023-ம் தேதிய செயல்முறை ஆணை பிறப்பிக்கப்பட்டு இவ்வலுவலகம் வரப்பெற்றுள்ளது.

மேற்கண்ட மதுரை மாநகராட்சி – மத்திய திட்டம் – மதுரை தெற்கு வட்டம் – மண்டலம் **5** – அவனியாபுரம் கிராமம், வார்டு : **92** – சர்வே எண்கள்: 526/1A1, 1B, 3A–ல் **1.92** ஏக்கர் (**7758.00** சதுர மீட்டர்) பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவில் அமையும் **<u>சாலைக்கான இடம் Iவது (1–1) சாலையானது 77.62 மீட்டர் நீளமும், 10.00 மீட்டர் அகலமும (33 அடி சாலையாகவும்), சாலைக்கான இடம் IIவது (2–2) சாலையானது 20.95 மீட்டர் நீளமும், 07.20 மீட்டர் அகலமும (23 அடி சாலையாகவும்), சாலைக்கான இடம் IIIவது (3–3) சாலையானது 24.37 மீட்டர் நீளமும், 09.15 மீட்டர் அகலமும (30 அடி சாலையாகவும்), சாலைக்கான இடம் IVவது (4–4) சாலையானது 66.00 மீட்டர் நீளமும், 09.15 மீட்டர் அகலமும (30 அடி சாலையாகவும்), சாலைக்கான இடம் Vவது (5–5) சாலையானது 45.95 மீட்டர் நீளமும், 07.20 மீட்டர் அகலமும (23 அடி சாலையாகவும்), சாலைக்கான இடம் VIவது</u>**

**(6–6) சாலையானது 24.37 மீட்டர் நீளமும், 07.20 மீட்டர் அகலமும (23 அடி சாலையாகவும்), மூலை முடக்கு 11.25 சதுர மீட்டர் உட்பட மொத்தம் 2306.18 சதுர மீட்டர் இடத்தினை பத்திரம் எண்: 4318/2023, நாள்: 24.04.2023-ம் தேதி மற்றும் உள்ளாட்சி அமைப்புக்கான இடம் - 35.70 சதுர மீட்டர் இடத்தினை பத்திரம் எண்: 4318/2023, நாள்: 24.04.2023-தேதியில** மதுரை மாவட்டம், மதுரை தெற்கு பதிவு மாவட்டம், தெற்குத் தாலுகா, அவனியாபுரம் கிராமம், ஆணையாளர் மதுரை மாநகராட்சி என்ற பெயருக்கு பதிந்த அசல் ஆவணங்கள் மற்றும் மனைப்பிரிவில் தார் சாலை அமைத்து அதன் புகைப்படம் ஆகியவற்றை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி சாலை மற்றும் உள்ளாட்சி அமைப்புக்கான இடங்களை மாநகராட்சி வசம் உள்ள சாலை பதிவேட்டில் பதிவு செய்ய (Road Register) UTIS மென்பொருளில் பதிவு செய்து காலிமனை வரிவிதித்தற்கும் நகரமைப்பு குழு ஒப்புதல் பெறப்பட்டு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 394**

**பின்னேற்புசெய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**33. மதி1/015859/2021**

மதுரை மாநகராட்சி – மத்திய திட்டம் – மதுரை வடக்கு வட்டம் – மண்டலம் 1 – ஆனையூர் 2வது பிட் கிராமம், வார்டு 03 – சர்வே எண்கள்: 50/2, 50/3, 51/5, 51/9, 51/10, 52/11, 52/18, 52/19–ல் 0.62ஏக்கர் (2500.00 சதுர மீட்டர்) பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க. உத்தேச சாலை மற்றும் உள்ளாட்சி அமைப்பிற்கான இடத்தினை ஆணையாளர். மதுரை மாநகராட்சி பெயருக்கு பத்திர பதிவு செய்து அதன் அசல் ஆவணங்களுடன் உதவி இயக்குநர், உறுப்பினர் செயலர்(பொ) மதுரை மாவட்டம் நகர் ஊரமைப்பு அலுவலகம். மதுரை அவர்களின் ந.க.எண்: 2262/2021/மதி2 நாள்: 22.09.2021-ம் தேதிய செயல்முறை ஆணை பிறப்பிக்கப்பட்டு இவ்வலுவலகம் வரப்பெற்றுள்ளது.

மேற்கண்ட மதுரை மாநகராட்சி – மத்திய திட்டம் – மதுரை வடக்கு வட்டம் – மண்டலம் 1 – ஆனையூர் 2வது பிட் கிராமம், வார்டு 03 – சர்வே எண்கள்: 50/2, 50/3, 51/5, 51/9, 51/10, 52/11, 52/18, 52/19–ல் 0.62ஏக்கர் (2500.00 சதுர மீட்டர்) பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவில் மனைப்பிரிவில் அமையும் **சாலைக்கான இடம் Iவது (1–1) சாலையானது 36.20 மீட்டர் நீளமும், 09.00 மீட்டர் அகலமும (30 அடி சாலையாகவும்), IIவது (2–2) சாலையானது 41.25 மீட்டர் நீளமும், 07.20 மீட்டர் அகலமும (23 அடி சாலையாகவும்), மூலை முடக்கு உட்பட 622.57 சதுர மீட்டர் இடத்தினையும் பத்திரம் எண்: 12540/2022, நாள்: 01.10.2021-ம் தேதியில் மற்றும் உள்ளாட்சி அமைப்புக்கான இடம் - 13.58 சதுர மீட்டர் பத்திரம் எண்: 12540/2022, நாள்: 01.10.2021-ம் தேதியில்** மதுரை மாவட்டம், மதுரை தெற்கு பதிவு மாவட்டம், மதுரை 4நிர் இணை சார்பதிவகம், மதுரை வடக்கு தாலுகா, ஆனையூர் 2வது பிட் கிராமம், ஆணையாளர் மதுரை மாநகராட்சி என்ற பெயருக்கு பதிந்த அசல் ஆவணங்கள் மற்றும் மனைப்பிரிவில் தார் சாலை அமைத்து அதன் புகைப்படம் ஆகியவற்றை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது, மேற்படி சாலை மற்றும் உள்ளாட்சி அமைக்கான இடங்களை மாநகராட்சி வசம் உள்ள சாலை பதிவேட்டில் பதிவு செய்ய (Road Register) UTIS மென்பொருளில் பதிவு செய்து காலிமனை வரிவிதித்தற்கும் நகரமைப்புக்குழு வழி ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்: 395**

**பின்னேற்புசெய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**இடம்: மதுரை** — **(ஒம்.) திருமதி. வ.இந்திராணி**

**நாள்: 28.12.2023** — **மேயர்**

**மதுரை மாநகராட்சி**